## சிகாகோ நகரில்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் மிதிவண்டிப் பயணம்!

## சமூக வலைதளத்தில் பகிர்வு!



சிகாகோ, செப்.6-

சிகாகோ நகரில் மாலை மிதிவண்டிப் பயணம் மேற்கொண்ட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அதுகுறித்த காணொலியைச் சமூக வலைதளங்களில் பகிர்ந்திருந்தார்.

***அதைப் பகிர்ந்த மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி அவர்கள், "சகோதரரே! நாம் எப்போது சென்னையில் ஒன்றாக இப்படி சைக்கிள் பயணம் செய்யப் போகிறோம்?" எனக் கேட்டுப் பதிவிட்டிருந்திருந்தார்.***

***அதற்குப் பதிலளித்த முதலமைச்சர் அவர்கள், "அன்புச் சகோதரர் ராகுல் காந்தி அவர்களே, தங்களுக்கு எப்போது நேரம் கிடைத்தாலும் அப்போது நாம் ஒன்றாகச் சென்னையில் பயணிப்போம்! நான் இன்னமும் தங்களுக்கு என் தரப்பில் இருந்து இனிப்புகள் வழங்க வேண்டியுள்ளது. எனவே, மிதிவண்டிப் பயணம் முடிந்ததும் எனது இல்லத்தில் இனிப்புடன் கூடிய அறுசுவை தென்னிந்திய உணவை உண்டு மகிழ்ந்திடுவோம்"***

எனத் தனது சமூக வலைதளப் பக்கங்களில் பதிவிட்டுள்ளார்.

## எதிர்கால உலகத்தை சிரத்தையாய்ச் செதுக்கும் ஆசிரியச் சிற்பிகளுக்கு -

# எனது உளங்கனிந்த ஆசிரியர் தின நல்வாழ்த்துக்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

**சிகாகோ, செப். 6-**

**ஆசிரியர் தினத்தையொட்டி, ஆசிரியப் பெருமக்களுக்கு வாழ்த்துத் தெரிவித்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செய்தி வெளியிட்டுள்ளார்கள்.**

**அச்செய்தியில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், "சிறப்பான பொறுப்பினை சிரமேற்கொண்டு உளி படாமல் துளி சிதறாமல் எதிர்கால உலகத்தை சிரத்தையாய்ச் செதுக்கும் ஆசிரியச் சிற்பிகளுக்கு எனது உளங்கனிந்த ஆசிரியர் தின நல்வாழ்த்துக்கள்!" என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 'ஆசிரியர் தின' வாழ்த்துச் செய்தி வருமாறு:-

மாணவர்களுக்கு கல்வியறிவு புகட்டுவதோடு, அவர்களுக்கு எதிர்கால இலக்குகளையும் அடையாளம் காட்டி வெற்றித் திசையைச் சுட்டிக் காட்டிடும் அறிவுச் சுடர்களான ஆசிரியப் பெருமக்கள் அனைவருக்கும் எனது அன்பான ஆசிரியர் தின நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"கல்வி கற்றிடின் கழிந்திடும் மடமை!

கற்பதுவே உன் முதற்கடமை!"



- என்ற பாவேந்தரின் வார்த்தைகளைப் பசுமரத்தாணி போல மாணவர்களின் மனதில் பதியச் செய்து, பார் போற்றும் நல்லவராக, பொது நலச் சிந்தையில் புடம் போட்ட தங்கங்களாக மாணவர்களை உருவாக்குபவர்கள் ஆசிரியர்கள்.

ஓர் ஆசிரியரின் எழுதுகோல் குனிகிற போதெல்லாம் அங்கே ஒரு தலைமுறை தழைத்தோங்கி தலை நிமிர்ந்து நிற்கும் என்பது முற்றிலும் உண்மை.

சமூகநீதி காத்து, சமுதாய ஏற்றத்திற்கான மாற்றத்தையும் மலர்ச்சியையும் வகுப்பறைகளில் பேணிக்காப்பவர்கள் ஆசிரியர்கள். இத்தகைய சிறப்பான பொறுப்பினை சிரமேற்கொண்டு உளிபடாமல் துளி சிதறாமல் எதிர்கால உலகத்தை சிரத்தையாய்ச் செதுக்கும் ஆசிரியச் சிற்பிகளுக்கு எனது உளங்கனிந்த ஆசிரியர் தின நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

**மேலும் முதல்வர் அவர்கள் - ஆசிரியர் தினத்தை முன்னிட்டு சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-**

பாடப்புத்தகங்களைக் கடந்து மாணவர்களுக்குள் தாக்கத்தை ஏற்படுத்தும் வல்லமை பெற்றவர்கள் ஆசிரியப் பெருமக்கள்! நல்ல ஆசிரியர்கள் வாய்க்கப்பெற்ற மாணவர்கள், நல்லதொரு நாளையை உருவாக்கும் திறம் பெற்றவர்கள்!

அறிவும் பண்பும் ஊட்டி, மாணவர்களுக்குத் திசைகாட்டியாக விளங்கும் நல்லாசிரியர்களுக்கு ஆசிரியர் தின வாழ்த்துகள்!

இவ்வாறு அவ்வாழ்த்துச் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# 'டிரில்லியன்ட்' நிறுவனம் - ரூ.2 ஆயிரம் கோடி புரிந்துணர்வு ஒப்பந்தம்!

முதல் பக்கத் தொடர்ச்சி

**டிரில்லியன்ட் நெட்வர்க்ஸ் நிறுவனம் (Trilliant Networks, Inc)**

டிரில்லியன்ட் நிறுவனம் மேம்பட்ட அளவீட்டு உள்கட்டமைப்பு (Advanced Metering Infrastructure), ஸ்மார்ட் கிரிட், ஸ்மார்ட் நகரங்கள் மற்றும் IIoT (Industrial Internet of Things) ஆகியவற்றிற்கான தீர்வுகளை வழங்கும் முன்னணி சர்வதேச நிறுவனமாகும். இந்நிறுவனம் ஆற்றல் திறன், நம்பகத்தன்மை, புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்களின் ஒருங்கிணைப்பு, மேம்பட்ட அளவீட்டு உள்கட்டமைப்பு போன்றவற்றிற்கு தீர்வுகளை வழங்குகிறது. இந்நிறுவனத்தின் கார்ப்பரேட் தலைமையகம் அமெரிக்க நாட்டின், வட கரோலினாவின் கேரியில் அமைந்துள்ளது.

**டிரில்லியன்ட் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது**

முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில், டிரில்லியன்ட் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே 2000 கோடி ரூபாய் முதலீட்டில் தமிழ்நாட்டில் வளர்ச்சி மற்றும் உலகளாவிய உதவி மையம் (Development & Global Support Centre) மற்றும் உற்பத்தி மையத்தை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்வில், டிரில்லியன்ட் நிறுவனத்தின் தலைமை வணிக அலுவலர் மைக்கேல் ஜே மார்டிமர் மற்றும் உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.

**நைக்கி நிறுவனம் (NIKE Inc.)**

நைக்கி நிறுவனம் அமெரிக்க நாட்டைச் சேர்ந்த உலகின் மிகப்பெரிய விளையாட்டு காலணிகள் மற்றும் ஆடைகள் தயாரிப்பு நிறுவனமாகும். நைகி நிறுவனம் ஃபார்ச்சூன் 500 நிறுவனங்களில் ஒன்றாகும்.

கால்பந்து, கூடைப்பந்து, தடகளம், டென்னிஸ், அமெரிக்க கால்பந்து, கோல்ஃப், ஐஸ் ஹாக்கி போன்ற விளையாட்டிற்கான காலணிகள், ஜெர்சிகள், ஷார்ட்ஸ், கிளீட்ஸ், பேஸ்லேயர்ஸ் போன்றவை இதன் தயாரிப்பு பொருட்களில் அடங்கும்.

இந்நிறுவனத்தின் உலகளாவிய தலைமையகம் அமெரிக்க நாட்டின், ஓரிகானின் பெவர்டன்னில் அமைந்துள்ளது. தமிழ்நாட்டில் நைக்கி நிறுவனம் அதன் விநியோகச் சங்கிலி விற்பனை நிலையங்களை அமைத்துள்ளது.

மேலும், நைக்கி நிறுவனத்தின் இரண்டு பெரிய ஒப்பந்த உற்பத்தியாளர்களான ஃபெங் டே மற்றும் பவுச்சென் மூலம் தமிழ்நாட்டில் நைகி நிறுவனம் தனது காலணி உற்பத்தியை மேற்கொண்டு வருகிறது. இதன்மூலம் ஆண்டுக்கு 60 இலட்சம் ஜோடி காலணிகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இதில் 28,000 நபர்கள் பணி புரிந்து வருகின்றனர்.

**நைக்கி நிறுவனத்தின் உயர் அலுவலர்களை முதலமைச்சர் அவர்கள் சந்தித்து தமிழ்நாட்டில் புதிய முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுத்தார்.**

முதலமைச்சர் அவர்கள், நைகி நிறுவனத்தின் தலைமை வழங்கல் அலுவலர் (Chief Supply Chain Officer) வெங்கடேஷ் அழகிரிசாமி, துணைத் தலைவர்கள் திருமதி கிறிஸ்டன் ஹேன்சன், ஜார்ஜ் காசிமிரோ மற்றும் உயர் அலுவலர்களுடன், தமிழ்நாட்டில் தோல் அல்லாத காலணிகளின் உற்பத்தியை மேலும் விரிவுபடுத்துவதற்கான சாத்தியக்கூறுகள், ஆடைகள் உற்பத்திக்கான சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குவது பற்றியும், சென்னையில் தயாரிப்பு உருவாக்கம் மற்றும் வடிவமைப்பு மையத்தை நிறுவுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும், தமிழ்நாடு அரசின் முதன்மையான திறன் மேம்பாட்டு திட்டமான "நான் முதல்வன்" திட்டத்தின் கீழ், திறன் கூட்டாண்மையுடன் இணைந்து செயல்படுவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

**ஆப்டம் நிறுவனம் (Optum)**

ஆப்டம் நிறுவனம் யுனைடெட் ஹெல்த்கேர் குழுமத்தின் துணை நிறுவனமாகும். இது அமெரிக்காவில் உள்ள ஹெல்த் இன்சூரன்ஸ் நிறுவனங்களில் முன்னணி நிறுவனம் ஆகும்.

இந்நிறுவனம் Optum Rx, Optum Health, Optum Insight ஆகிய மூன்று வணிகங்களை மேற்கொண்டு வருகிறது. தரவு மற்றும் பகுப்பாய்வு, மருந்தக பராமரிப்பு சேவைகள், மக்கள் தொகை சுகாதாரம், சுகாதார விநியோகம் மற்றும் நடவடிக்கைகள் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது.

இந்நிறுவனத்தின் தலைமையகம் அமெரிக்க நாட்டின் மினசோட்டா, ஈடன் பிராரியில் அமைந்துள்ளது. தமிழ்நாட்டில் ஆப்டம் நிறுவனம் சென்னையில் 5,000 க்கும் மேற்பட்ட ஊழியர்களுடன் Revenue Cycle Management செயல்பாடுகளை மேற்கொண்டு வருகிறது.

**ஆப்டம் நிறுவனத்தின் உயர் அலுவலர்களை முதலமைச்சர் அவர்கள் சந்தித்து தமிழ்நாட்டில் புதிய முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுத்தார்.**

முதலமைச்சர் அவர்கள் ஆப்டம் இன்சைட் நிறுவனத்தின் தலைமை செயல் அலுவலர் ரோஜர் கானர், யுனைடெட் ஹெல்த்கேர் குழுமத்தின் முதுநிலை துணைத் தலைவர் ஜான் மியாட் மற்றும் உயர் அலுவலர்களை சந்தித்து, தமிழ்நாட்டில் புதிய தொழில் முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுத்தார்.

இச்சந்திப்பின்போது, முதலமைச்சர் அவர்களுடன் ரோஜர் கானர், தமிழ்நாட்டில் ஆப்டம் நிறுவனத்தின் தற்போதைய செயல்பாடுகள் குறித்தும், தமிழ்நாட்டின் செழித்து வரும் சுகாதாரப் பாதுகாப்புத் துறைக்கு ஏற்ற வகையில், தொழில்துறைக்குத் தயாரான திறமைக் குழுவை உருவாக்குவதற்கான ஒத்துழைப்பு குறித்தும் ஆலோசித்தார்.

மேலும், இச்சந்திப்பின்போது, திறன் மேம்பாடு மற்றும் திறன்சூழலை எவ்வாறு இணைந்து செயல்படுத்துவது என்பது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன் கலந்துரையாடியது மகிழ்ச்சியளிக்கிறது என்று தெரிவித்த ரோஜர் கானர்., உயர் செயல்திறன் கொண்ட நவீன சுகாதார அமைப்பை உருவாக்குவதற்கான தங்கள் உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாக, தொடர்ந்து உலகளாவிய திறமைகளில் முதலீடு செய்து வருவதாகவும், வாடிக்கையாளர்களின் சேவை மற்றும் தேவைகளை சிறப்பாகப் பூர்த்தி செய்ய தங்கள் சேவை திறன்கள் மற்றும் செயல்திறனை மேம்படுத்தி வருகிறோம் என்றும் தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண் ராய், தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## சேலம் மாவட்டம் - வெள்ளையம்பட்டி பட்டாசு ஆலை வெடிவிபத்தில்

# உயிரிழந்தவர் குடும்பத்திற்கு ரூ.3 லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, செப்.6 -

சேலம் மாவட்டம், குப்பனூர் கிராமம், வெள்ளையம்பட்டியில் தனியார் பட்டாசு ஆலையில் நிகழ்ந்த வெடிவிபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி வழங்கி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பு வருமாறு :

சேலம் மாவட்டம், சேலம் வட்டம், குப்பனூர் கிராமம், வெள்ளையம்பட்டியில் உள்ள தனியார் பட்டாசு ஆலையில் நேற்று முன்தினம் (4-9-2024) காலை 10.00 மணியளவில் நிகழ்ந்த வெடிவிபத்தில் சிவகாசியை சேர்ந்த ஜெயராமன் (வயது 55) என்பவர் உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும் இவ்விபத்தில் சேலம் வட்டம், சின்னனூரைச் சேர்ந்த சுரேஷ் குமார் (வயது 34) மற்றும் சிவகாசியை சேர்ந்த முத்துராஜா (வயது 47) ஆகிய இருவர் பலத்த காயமடைந்து சேலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த வெடிவிபத்தில் உயிரிழந்த ஜெயராமன் என்பவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த வருத்தத்தையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து மூன்று இலட்சம் ரூபாய் வழங்கிடவும், காயமடைந்த இரு நபர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

## கல்லாக்கோட்டை அரசுப் பள்ளியில் பயின்று

# 7.5% இடஒதுக்கீடு மூலம் மருத்துவம் பயில இடம் பெற்ற மாணவிகள்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பாராட்டி நிதி உதவி!

புதுக்கோட்டை, செப். 6 –

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், வெள்ளாளவிடுதி, மங்களாகோவில் சமுதாயக் கூடத்தில் நடைபெற்ற "மக்களுடன் முதல்வர்" திட்ட முகாமில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் 30.8.2024 அன்று மனுக்களை பதிவு செய்யும் சிறப்பு முகாமினை பார்வையிட்டு, மக்களிடம் கோரிக்கைகள் குறித்த விவரங்களை கேட்டறிந்தார்.

அமைச்சர் தெரிவித்ததாவது; –

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்கள் நல்வாழ்வு வாழ வேண்டும் என்ற அடிப்படையில் பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில் பொதுமக்கள் கோரிக்கை மனுக்களை பதிவு செய்திடும் வகையில், "மக்களுடன் முதல்வர் என்ற புதிய திட்டத்தை மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், நகர்ப்புறங்களை ஒட்டியுள்ள கிராம ஊராட்சிகளில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 18.12.2023 அன்று தொடங்கி வைத்தார்கள்.

அதனைத்தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் "மக்களுடன் முதல்வர்" திட்டத்தை ஊரகப் பகுதிகளுக்கும் விரிவுப்படுத்திடும் திட்டத்தை தொடங்கி வைத்தார்கள்.

இந்நிலையில், புதுக்கோட்டை மாவட்டத்தில் 11.07.2024 முதல் 10.09.2024 வரை 13 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 495 கிராம ஊராட்சிகளில் 66 "மக்களுடன் முதல்வர்" திட்ட முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி, கந்தர்வக் கோட்டை ஊராட்சி ஒன்றியம், வெள்ளாள விடுதி,

மங்களாகோவில் சமுதாயக் கூடத்தில் நடைபெற்ற "மக்களுடன் முதல்வர்" திட்ட முகாம் பார்வையிட்டு, மக்களிடம் கோரிக்கைகள் குறித்த விவரங்கள் கேட்டறியப்பட்டது. எனவே பொது மக்களின் கோரிக்கை மனுக்கள் மீது தொடர்புடைய அரசு அலுவலர்கள் உரிய பரிசீலனை செய்து தீர்வு காண வேண்டும் எனவும் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்தார்.

பின்னர், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், சுந்தர்வ கோட்டை ஊராட்சி ஒன்றியம், அண்டனூர் ஊராட்சி, மஞ்சம்பட்டி முத்துமாரியம்மன் கோவில் அருகில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள உயர்மின் கோபுர விளக்கினையும், வெள்ளாளவிடுதி ஊராட்சியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பேருந்து நிலைய பயணியர் நிழற்குடையினையும், ஆதிதிராவிடர் தெருவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியினையும், திருக்கட்டளை ஊராட்சியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மின்மாற்றியினையும் திறந்து வைத்தார். மேலும், கல்லாக் கோட்டை ஊராட்சி அரசு மேல்நிலைப் பள்ளியில் பசுமை பள்ளி பணியினை அடிக்கல் நாட்டி துவக்கி வைத்து, பள்ளி மாணாக்கர்களுக்கு விலையில்லா மிதி வண்டிகளை வழங்கினார்.

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை சட்டமன்றத் தொகுதி கல்லாக்கோட்டை அரசு மேல்நிலைப் பள்ளியில் பயின்று நீட் தேர்வில் தேர்ச்சி பெற்று 7.5% இடஒதுக்கீடு மூலம் மருத்துவம் பயில இடம் பெற்ற மாணவிகள் டி. யுவதிகா அரசு மருத்துவக் கல்லூரி நீலகிரி, எம். ராகவி, ஆர்.வி.எஸ்.பல் மருத்துவக் கல்லூரி கோவை,

எம். அபிநயா அரசு மருத்துவக் கல்லூரி புதுக்கோட்டை, ஆர். பவித்ரா மாதா பல் மருத்துவக் கல்லூரி குன்றத்தூர் உள்ளிட்ட ஏழு மாணவிகளையும் பாராட்டி, வரும் காலங்களில் சிறப்பாக மருத்துவக் கல்வியில் தேர்ச்சி அடைந்து பொதுமக்களுக்கு சேவையாற்றிட வாழ்த்துகள் தெரிவித்து நிதி உதவி வழங்கி பாராட்டினார்.

இந்நிகழ்வுகளில், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அப்தாப் ரசூல், கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் ஜெயலட்சுமி தமிழ்செல்வன், கந்தர்வக்கோட்டை ஒன்றியக்குழுத் தலைவர் கார்த்திக் (எ) இரா.ரெத்தினவேல், மங்களாபுரம் ஊராட்சிமன்றத் தலைவர் எம்.பரமசிவம், நியூஸ் ராஜேந்திரன், எம்.ஆர்.கே.முருகேசன், எஸ்.ஆர்.கலையரசன், குஞ்சப்பா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்ட மன்ற தொகுதி கழுதூர் ஊராட்சி பெரியார் நினைவு சமத்துவபுரம் பகுதியில் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் புதிய கால் நடை நிலையத்தை தொழிலாளர் நலன்திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் திறந்து வைத்தார்.